## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கரூர்.

**முன்னிலை:-** திரு: எஸ்.பி.பரத்குமார், எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1 கரூர்

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீவிசுவாவசு வருடம், மாசி வியாழன் 28-ஆம் நாள்,
**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12-ஆம் நாள் வியாழக்கிழமை**

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.854/2023

**CNR- TNKR** 02 012504 2023

| | | |
|---|---|---|
| 1. | Name of the court | Judicial Magistrate No.1,Karur. |
| 2. | Name of the Judge | Thiru.S.P.Barathkumar M.B.A.,L.L.M., |
| 3. | Date of Judgment | 12.03.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC NO 854/2023<br>CNR- TNKR 02 012504 2023 |
| 5. | Name of the Parties of the case | Inspector of police<br>Karur /Vs/<br>1. Sekar, S/o Kaliyannan<br><br>2. Rajeshkanna S/o Aathi Narayanan<br><br>3.Dinesh S/o Palanisamy<br><br>4. Thiyagarajan S/o Ganesan<br>(இவ்வழக்கின் A1 மற்றும் A3 எதிரிகளுக்காக CC 596/2022 ல் ஏற்கனவே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கானது A2 மற்றும் A4 எதிரிகளுக்காக CC 854/2023 ஆக தனியாக பிரிக்கப்பட்டுள்ளது) |
| 6. | Date of Occurrence | 24.09.2021 |
| 7. | Date of Complaint | 24.09.2021 |
| 8. | Date of Arrest if any and Remand | A2- 24.09.2021<br>A4- முன்பிணையம் பெற்றதால் கைது நடவடிக்கை இல்லை |
| 9. | Period of remand of the accused | A2-24.09.2021 to 14.10.2021<br>A4- முன்பிணையம் பெற்றதால் கைது நடவடிக்கை இல்லை |
| 10. | Date of Release on bail | A2-14.10.2021<br>A4- முன்பிணையம் பெற்றதால் கைது நடவடிக்கை இல்லை |
| 11. | Date of Final report | 24.10.2021 |
| 12. | Date of Committal of the case to | Nil |

<table>
<tr><td></td><td>the Court of Session</td><td colspan="3"></td></tr>
<tr><td>13.</td><td>Date of questioning of the accused U/s. 228, 240, 246 and 251 of Code of Criminal Procedure</td><td colspan="3">31.07.2023</td></tr>
<tr><td rowspan="2">14.</td><td rowspan="2">Date of examination in Chief and Cross examination of the witness</td><td>No. of. Witness</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW-1<br>PW-2<br>PW-3<br>PW4</td><td>10.02.2026<br>10.02.2026<br>10.02.2026<br>03.03.2026</td><td>10.02.2026<br>10.02.2026<br>10.02.2026<br>03.03.2026</td></tr>
<tr><td>15.</td><td>Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts except routine petitions like petition under section 317 of the Code</td><td colspan="3">Nil</td></tr>
<tr><td>16</td><td>Date of examination of the accused U/s. 313 of the Code</td><td colspan="3">09.03.2026</td></tr>
<tr><td>17.</td><td>Details of abscondence of an accused and his appearance/production as the case may be</td><td colspan="3">Nil</td></tr>
<tr><td>18.</td><td>Grant of stay by Superior Courts and the results thereof</td><td colspan="3">Nil</td></tr>
<tr><td>19.</td><td>Date of Commencement of Trial</td><td colspan="3">10.10.2023</td></tr>
<tr><td>20.</td><td>Date of closure of Trial</td><td colspan="3">09.03.2026</td></tr>
<tr><td>21.</td><td>Date of Sentence or order</td><td colspan="3">12.03.2026</td></tr>
<tr><td>22.</td><td>Date of service of copy of judgment to the accused</td><td colspan="3">12.03.2026</td></tr>
<tr><td>23.</td><td>If any delay, give explanation</td><td colspan="3">No</td></tr>
</table>

இவ்வழக்கானது கடந்த 10.10.2023 ஆம் நாள் இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, கடந்த 09.03.2026 ஆம் நாள் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, அரசு தரப்பிற்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 கரூர் அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், A2 எதிரிக்காக வழக்கறிஞர் திரு. பாண்டியன் B.A..B.L., அவர்கள் ஆஜராகியும் மற்றும் A4 எதிரிக்காக வழக்கறிஞர் திரு. முகம்மது இஸ்மாயில் B.A.,L.L.B., அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று 12.03.2026 ம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும்,

| | |
|---|---|
| புகார்தாரர் | காவல் ஆய்வாளர், கரூர் காவல் நிலையம்,<br>கா.கு.எண் 95/2021 |
| எதிரிகளின் பெயர் | 1. சேகர், த/பெ காளியண்ணன்,<br>3/22, எட்டிக்காம்பாளையம்,<br>சீராப்பள்ளி(அஞ்சல்),பரமத்தி வேலூர்(வட்டம்),<br>நாமக்கல் மாவட்டம்.<br><br>2. ராஜேஷ்கண்ணா, த/பெ ஆதி நாராயணன்,<br>47, அங்கையர்கன்னி,ஜுவா நகர் 2 வது தெரு,<br>ஜெய்கிந்தபுரம்,<br>மதுரை மாவட்டம்.<br><br>3. தினேஷ், த/பெ பழனிச்சாமி,<br>கரட்டுப்பாளையம்,<br>பரமத்திவேலூார்(வட்டம்),<br>நாமக்கல் மாவட்டம்.<br><br>4. தியாகராஜன், த/பெ கணேசன்,<br>முத்தமிழ்நகர், பெரியப்பட்டி சாலை,<br>பெரியப்பட்டி,<br>நாமக்கல் மாவட்டம்.<br>(இவ்வழக்கின் A1 மற்றும் A3 எதிரிகளுக்காக CC 596/2022 ல் ஏற்கனவே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கானது A2 மற்றும் A4 எதிரிகளுக்காக CC 854/2023 ஆக தனியாக பிரிக்கப்பட்டுள்ளது) |
| அரசு தரப்பில் எதிரிகளின் மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 6(4) TNSC (RDCS) ORDER, 1982, 7(1)(a)(ii) EC ACT |
| நீதிமன்றத்தால் எதிரிகளின் மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 6(4) TNSC (RDCS) ORDER, 1982, 7(1)(a)(ii) EC ACT |
| எதிரிகளின் பதில் | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் முடிவு | குற்றவாளி இல்லை |
| அரசு கூடுதல் குற்ற வழக்கறிஞர் | திரு. R. தண்டபாணி |
| எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | A2 - திரு. பாண்டியன்<br>A4- திரு. முகம்மது இஸ்மாயில் |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 09.03.2025 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 12.03.2025 |

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த 24.09.2021 ம் தேதி காலை சுமார் 05.30 மணியளவில் சாட்சி 5 ல்

கண்ட கரூர் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறை உதவி ஆய்வாளர் திருமதி. சத்தியபிரியா என்பவர் கரூர் மாவட்டத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு பொது விநியோகத்திட்ட அத்தியாவசியப் பண்டங்களை பதுக்குதல், கடத்துதல் மற்றும் கள்ளச்சந்தையில் விற்பனை செய்தல் போன்ற குற்றங்களை கண்டுபிடிக்கும் பொருட்டு சாட்சிகள் 1,2,3 ஆகியோர்களுடன் கரூர் மாவட்ட எல்லைக்குட்பட்ட வாங்கல் to மோகனூர் பாலம் வாங்கல் செக்போஸ்ட் அருகே தணிக்கை செய்து கொண்டிருந்தபோது மோகனூர் நோக்கி சென்று சென்று கொண்டிருந்த மார்ஜினில் கண்ட 3வது எதிரி தினேஷ்க்கு சொந்தமான TN 28 M 8011 என்ற பதிவு எண் கொண்ட டாரஸ் லாரியில் ரூ3,05,933/- மதிப்புள்ள தலா 50 கிலோ எடை கொண்ட 457 மூட்டைகளில் இருந்த உடைந்த அரிசி மற்றும் தலா 50 கிலோ எடை கொண்ட 21 மூட்டைகளில் இருந்த பொது விநியோகத்திட்ட ரேசன் அரிசியை இவ்வழக்கின் எதிரிகளான A1- சேகர், A2- ராஜேஷ்கண்ணா(எ)குமார், A3-தினேஷ் ஆகியோர்கள் ஆவணங்கள் மற்றும் உரிமம் எதுவும் இல்லாமல் கடத்தி வந்ததை கண்டுபிடித்துள்ளார் என்பதால் 1 முதல் 4 வரை எதிரிகள் 1982 ம் வருடத்திய தமிழ்நாடு அட்டவணையிடப்பட்ட பண்டங்கள்(அட்டைகள் மூலம் விநியோகம் முறைப்படுத்துதல்) ஆணையின் பிரிவு 6(4)ஐ மீறிய செயலாற்றியுள்ளதால் இவ்வழக்கின் எதிரிகளான A1, A2, A3, A4 ஆகியோர்களின் செய்கையானது 1955 ம் ஆண்டின் அத்தியாவசிய பண்டங்கள் சட்டப்பிரிவு 7(i)(a)(ii)ன் படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாகவும், எனவே எதிரிகளின் செய்கைக்கு கரூர் நகர காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரிகளின் மீது U/s. 6(4) TNSC (RDCS) ORDER, 1982, 7(1)(a)(ii) EC ACT ன் கீழ் வழக்கு பதிவு செய்து மேற்படி வழக்கானது சி.சி. எண் 854/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கில் எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.207-ஆவது பிரிவின் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரிகள் மீதான சட்டப்பிரிவு U/s. 6(4) TNSC (RDCS) ORDER, 1982, 7(1)(a)(ii) EC ACT ன் படி குற்ற சாராம்சம் குறித்து எடுத்துக்கூறி வினவியபோது, எதிரிகள் குற்றத்தை மறுத்து,பொய் வழக்கு, என்றார்கள். எனவே அரசுதரப்பு சாட்சிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அரசுதரப்பு சாட்சியின் விசாரணை தொடங்கியது.

4) இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள்

ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:-</u>**

i) அ.சா.1 தனது சாட்சியத்தில், "நான் தற்போது திருச்சி மாநகரம், கண்டோண்ட்மெண்ட் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.09.2021 ம் தேதி காலை வாங்கல் செக்போஸ்ட் அருகே சுமார் காலை 05.30 மணிக்கு உதவி ஆய்வாளர் சத்யபிரியா, தலைமைக்காவலர் காந்தி செல்வன், காவலர் வசந்த் ஆகியோருடன் நானும் வாகன தணிக்கையில் இருந்தபோது, வடக்கு நோக்கி TN 28 M 8011 டாரஸ் லாரியை நிறுத்தியபோது அந்த லாரியை ஓட்டி வந்த சேகர் என்பவர் தப்பி ஓட முயற்சி செய்தார். அவரை துரத்திப் பிடித்து விசாரித்தபோது, அதிலிருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்கு பையில் 457 மூட்டைகள் தலா 50 கிலோ வீதம் உடைந்த அரிசி மொத்தம் 22850 கிலோ அரிசியும், தலா 50 கிலோ எடையுள்ள 21 மூட்டைகளும் மொத்தம் 1050 கிலோ அரிசியும் இருந்தது. அந்த அரிசி மூட்டைகளை ஒவ்வொன்றாக தணிக்கை செய்தபோது, அந்த அரிசி தமிழக அரசால் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் ரேசன் அரிசி என்று தெரியவந்தது. எதிரியை காலை 06.00 மணிக்கு கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து 09.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்படி லாரி ஓட்டுநர் சேகர் என்பவரை விசாரித்தபோது மேற்படி லாரியை 23.09.2021 ம் தேதி நாமக்கல் பெருந்துரையில் சிமெண்ட் மூட்டைகள் ஏற்றிக்கொண்டு மதுரை தெப்பக்குளம் அருகே இறக்கிவிட்டதாகவும், அன்று மதியம் வழக்கின் 3 ம் எதிரியான லாரியின் உரிமையாளர் தினேஷ் என்பவரிடம் தொலைபேசியில் வேறு ஏதேனும் லோடு ஏற்றி செல்ல வேண்டுமா என்று கேட்டதற்கு 2 ம் எதிரியான ஓம் சன் டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வரும் ராஜேஷ் கண்ணா (எ) குமார் என்பவரிடம் அரிசி மூட்டை லோடு இருப்பதாகவும் அதை ஏற்றிக்கொண்டு நாமக்கல் முத்து பவுல்ட்ரி ஏஜென்சி நிறுவனத்தில் மூட்டைகளை இறக்கி வருமாறும் கூறியதாகவும் கூறினார். அவ்வாறு ஏற்றி வரும்போது அரவக்குறிச்சி செக்போஸ்ட்டில் போலிசார் வாகன தணிக்கை செய்வார்கள் என பயந்துகொண்டு பள்ளபட்டி வழியாக மோகனூர் நோக்கி வந்ததாகவும் கூறினார். பின்னர் அவர் தன்னிச்சையாக தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டதால் சம்பவ இடத்தில் பொதுவான சாட்சிகள் இல்லாத நிலையில் என் முன்னிலையிலும், தலைமைக்காவலர் காந்தி செல்வன் அவர்கள் முன்னிலையிலும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் அரிசி மூட்டைகளை

கைப்பற்றினோம். என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 1.** என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 2**. பின்னர் வழக்குச்சொத்துடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் சத்ய பிரியா அவர்கள் முதல் அறிக்கை பதிவு செய்ய உதவியாக இருந்தேன். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார் "என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

ii) அ.சா.2 தனது சாட்சியத்தில், “நான் தற்போது கரூர் மாவட்டம், சின்னத்தாராபுரம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.09.2021ம் தேதி காலை வாங்கல் செக்போஸ்ட் அருகே சுமார் காலை 05.30 மணிக்கு உதவி ஆய்வாளர் சத்யபிரியா, சிறப்பு உதவி ஆய்வாளர் ராமசந்திரன், காவலர் வசந்த் ஆகியோருடன் நானும் வாகனத்தணிக்கையில் இருந்தபோது, வடக்கு நோக்கி TN 28 M 8011 டாரஸ் லாரியை நிறுத்தியபோது அந்த லாரியை ஓட்டி வந்த சேகர் என்பவர் தப்பி ஓட முயற்சி செய்தார். அவரை துரத்திப் பிடித்து விசாரித்தபோது, அதிலிருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்கு பையில் 457 மூட்டைகள் தலா 50 கிலோ வீதம் உடைந்த அரிசி மொத்தம் 22850 கிலோ அரிசியும், தலா 50 கிலோ எடையுள்ள 21 மூட்டைகளும் மொத்தம் 1050 கிலோ அரிசியும் இருந்தது. அந்த அரிசி மூட்டைகளை ஒவ்வொன்றாக தணிக்கை செய்தபோது, அந்த அரிசி தமிழக அரசால் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் ரேசன் அரிசி என்று தெரியவந்தது. எதிரியை காலை 06.00 மணிக்கு கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து 09.30 மணிக்கு வழக்குப்பதிவு செய்யப்பட்டது. மேற்படி லாரி ஓட்டுநர் சேகர் என்பவரை விசாரித்தபோது மேற்படி லாரியை 23.09.2021ம் தேதி நாமக்கல் பெருந்துறையில் சிமெண்ட் மூட்டைகள் ஏற்றிக்கொண்டு மதுரை தெப்பக்குளம் அருகே இறக்கிவிட்டதாகவும், அன்று மதியம் வழக்கின் 3ம் எதிரியான லாரியின் உரிமையாளர் தினேஷ் என்பவரிடம் தொலைபேசியில் வேறு ஏதேனும் லோடு ஏற்றி செல்ல வேண்டுமா என்று கேட்டதற்கு 2ம் எதிரியான ஓம் சன் டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வரும் ராஜேஷ் கண்ணா (எ) குமார் என்பவரிடம் அரிசி மூட்டை லோடு இருப்பதாகவும் அதை ஏற்றிக்கொண்டு நாமக்கல் முத்து பவுல்ட்ரி ஏஜென்சி நிறுவனத்தில் மூட்டைகளை இறக்கி வருமாறும் கூறியதாகவும் கூறினார். அவ்வாறு ஏற்றி வரும்போது அரவக்குறிச்சி செக்போஸ்ட்டில் போலிசார் வாகனத்தணிக்கை செய்வார்கள் என பயந்துகொண்டு பள்ளபட்டி வழியாக மோகனூர்

நோக்கி வந்ததாகவும் கூறினார். பின்னர் அவர் தன்னிச்சையாக தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டதால் சம்பவ இடத்தில் பொதுவான சாட்சிகள் இல்லாத நிலையில் என் முன்னிலையிலும், சிறப்பு உதவி ஆய்வாளர் ராமசந்திரன் முன்னிலையிலும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் அரிசி மூட்டைகளை கைப்பற்றினோம். என்னிடம் காட்டப்படும் 1 ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 3.** என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கைப்பற்றுதல் மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 4**. பின்னர் வழக்குச் சொத்துடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் சத்ய பிரியா அவர்கள் முதல் அறிக்கை பதிவு செய்ய உதவியாக இருந்தேன். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

iii) அ.சா.3 தனது சாட்சியத்தில், "நான் தற்போது கரூர் மாவட்டம், சின்னத்தாராபுரம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.09.2021 ம் தேதி காலை வாங்கல் செக்போஸ்ட் அருகே சுமார் காலை 05.30 மணிக்கு உதவி ஆய்வாளர் சத்யபிரியா, சிறப்பு உதவி ஆய்வாளர் ராமசந்திரன், காவலர் காந்தி செல்வன் ஆகியோருடன் நானும் வாகனத்தணிக்கையில் இருந்தபோது, வடக்கு நோக்கி TN 28 M 8011 டாரஸ் லாரியை நிறுத்தியபோது அந்த லாரியை ஓட்டி வந்த சேகர் என்பவர் தப்பி ஓட முயற்சி செய்தார். அவரை துரத்திப் பிடித்து விசாரித்தபோது, அதிலிருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்கு பையில் 457 மூட்டைகள் தலா 50 கிலோ வீதம் உடைந்த அரிசி மொத்தம் 22850 கிலோ அரிசியும், தலா 50 கிலோ எடையுள்ள 21 மூட்டைகளும் மொத்தம் 1050 கிலோ அரிசியும் இருந்தது. அந்த அரிசி மூட்டைகளை ஒவ்வொன்றாக தணிக்கை செய்தபோது, அந்த அரிசி தமிழக அரசால் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் ரேசன் அரிசி என்று தெரியவந்தது. எதிரியை காலை 06.00 மணிக்கு கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து 09.30 மணிக்கு வழக்குப்பதிவு செய்யப்பட்டது. மேற்படி லாரி ஓட்டுனர் சேகர் என்பவரை விசாரித்தபோது மேற்படி லாரியை 23.09.2021 ம் தேதி நாமக்கல் பெருந்துறையில் சிமெண்ட் மூட்டைகள் ஏற்றிக்கொண்டு மதுரை தெப்பக்குளம் அருகே இறக்கிவிட்டதாகவும், அன்று மதியம் வழக்கின் 3 ம் எதிரியான லாரியின் உரிமையாளர் தினேஷ் என்பவரிடம் தொலைபேசியில் வேறு ஏதேனும் லோடு ஏற்றி செல்ல வேண்டுமா என்று கேட்டதற்கு 2 ம்

எதிரியான ஓம் சன் டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வரும் ராஜேஷ் கண்ணா (எ) குமார் என்பவரிடம் அரிசி மூட்டை லோடு இருப்பதாகவும் அதை ஏற்றிக்கொண்டு நாமக்கல் முத்து பவுல்ட்ரி ஏஜென்சி நிறுவனத்தில் மூட்டைகளை இறக்கி வருமாறும் கூறியதாகவும் கூறினார். அவ்வாறு ஏற்றி வரும்போது அரவக்குறிச்சி செக்போஸ்ட்டில் போலிசார் வாகன தணிக்கை செய்வார்கள் என பயந்துகொண்டு பள்ளபட்டி வழியாக மோகனூர் நோக்கி வந்ததாகவும் கூறினார். பின்னர் வழக்குச் சொத்துடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் சத்ய பிரியா அவர்கள் முதல் அறிக்கை பதிவு செய்ய உதவியாக இருந்தேன். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்

iv) அ.சா.4 தனது சாட்சியத்தில், "நான் தற்போது திருப்பூர் மாவட்டம் மூலனூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 24.9.2021 ம் தேதி திருச்சி குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது கரூர் குடிமைப்பொருள் வழங்கல் உதவி ஆய்வாளராக இருந்த சத்யபிரியா என்பவர் கடந்த 24.9.2021 ம் தேதி காலை 5.30 மணியளவில் கரூர் வாங்கல்-மோகனூர் பாலம் ரோடு வாங்கல் செக்போஸ்ட் அருகே வாகனத்தணிக்கையின்போது TN 28 M 8011 என்ற அசோக் லேலண்டு டாரஸ் லாரியை சோதனை செய்தபோது அதனை ஓட்டி வந்த டிரைவர் சேகர் த/பெ.காளியண்ணன், பரமத்தி வேலூர், நாமக்கல் என்பவர் மேற்படி லாரியில் சுமார் 50 கிலோ எடையுள்ள 457 கிலோ மூட்டைகளில் உடைக்கப்பட்ட குருணை பொதுவிநியோகத்திட்ட அரிசியும் சுமார் 50 கிலோ எடையுள்ள 27 மூட்டைகளில் சுமார் 1050 கிலோ பொதுவிநியோகத்திட்ட அரிசியும் இருந்த காரணத்தினால் மேற்படி சேகர் என்பவரை விசாரிக்க அரிசி மதுரை ஜெய்ஹிந்தபுரம் ஓம்சந்த் டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் ராஜேஸ்குமார் என்ற குமார் என்பவரிடமிருந்து வாங்கி வந்ததாகவும் மேற்படி அரிசி கொண்டு வந்ததற்கு எந்தவித அனுமதியும் இல்லை என்பதால் கைது செய்யப்பட்டு சாட்சிகள் ராமச்சந்திரன், சிறப்பு உதவி ஆய்வாளர், த.கா. 664 காந்திசெல்வம் ஆகியோர் முன்னிலையில் காரணம் கூறி கைது செய்தபோது எதிரி சேகர் என்பவர் எவ்வித அச்சுறுத்தலும் இன்றி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் லாரி மற்றும் உடைத்த குருணை அரிசி 457 மூட்டைகள் மற்றும் உடைக்கப்படாத பொதுவிநியோகத்திட்ட அரிசி 27 மூட்டைகள் மற்றும் மற்றும் எதிரி சேகர் என்பவரிடமிருந்து டேக்ஸ் இன்வாய்ஸ் ஆகியவற்றை கைப்பற்றி தர பரிசோதனைக்காக மாதிரிக்கு எடுத்தும், லாரி மற்றும் அரிசி மூட்டைகளை மகசரில் கைப்பற்றியும், எதிரி

மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் கரூர் CSCID குற்ற எண்.95/2021 u/s.6(4)TNSC(RDCS) 1982 r/w 7(1)(a) (ii) of EC Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தும் முதல் தகவல் அறிக்கை அசலை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கரூர் அவர்களுக்கு அனுப்பியும், ஒருநகலை புலன்விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பை நான் பெற்றுக்கொண்டு சாட்சிகள் ராமச்சந்திரன், காந்திசெல்வன், வசந்த் ஆகியோரை விசாரணை செய்தும், வாக்குமூலம் பதிவு செய்தும், 1 ம் எதிரி சேகர் என்பவர் அடையாளம் காட்டிய ராஜேஷ்கண்ணா என்பவரை அன்றையதினமே காலை 11.30 மணிக்கு வெங்கக்கல்பட்டி பஸ்நிறுத்தம் அருகே கைது காரணம் கூறி கைது செய்தும், பின் கரூர் CSCID வந்து விசாரணை முடித்து எதிரிகள் சேகர் மற்றும் ராஜேஷ்கண்ணா ஆகியோரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். உதவி ஆய்வாளர் கைப்பற்றிய அரிசி மாதிரியை பகுப்பாய்வுக்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், கரூருக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட அரிசிக்கு தரச்சான்றிதழ் பெற்றும், அரிசியையும், கடத்த பயன்படுத்தி வந்த லாரியையும் 6A ன்படி கரூர் மாவட்ட வருவாய் அலுவலத்திற்கு பரிந்துரை செய்ய வேண்டி அறிக்கை அனுப்பினேன். பின்னர் வழக்கில் சம்பந்தப்பட்ட லாரியின் உரிமையாளர் தினேஷ் மற்றும் நாமக்கல் பெரியபட்டி ரோடு முத்து பவுல்டரி ஏஜென்சி உரிமையாளர் தியாகராஜன் ஆகியோர்களை மாண்புமிகு கரூர் அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றது தெரிய வந்தது. இவ்வழக்கில் மேற்கொண்டு உதவி ஆய்வாளர் திருமதி சத்யபிரியா, தரச்சான்றிதழ் வழங்கிய முகமதுஅசீம், துணை மண்டல மேலாளர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின் வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரிகள் சேகர், ராஜேஷ்கண்ணா, தினேஷ், தியாகராஜன் ஆகியோர் மீது 6(4)TNSC(RDCS) 1982 r/w 7(1)(a) (ii) of EC Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்" என்று சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6) எதிரிகளிடம், அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313 (1) (ஆ) வின் கீழ் விளக்கி வினவியபோது, குற்றத்தை மறுத்தார்கள். மேலும் எதிரிகள் தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றார்கள்.

<u>7) பிரச்சனைக்குரிய தீர்வு:-</u>

கடந்த 24.09.2021 ம் தேதி காலை சுமார் 05.30 மணியளவில் சாட்சி 5 ல் கண்ட கரூர் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறை உதவி ஆய்வாளர்

திருமதி. சத்தியபிரியா என்பவர் கரூர் மாவட்டத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு பொது விநியோகத்திட்ட அத்தியாவசியப் பண்டங்களை பதுக்குதல், கடத்துதல் மற்றும் கள்ளச்சந்தையில் விற்பனை செய்தல் போன்ற குற்றங்களை கண்டுபிடிக்கும் பொருட்டு சாட்சிகள் 1,2,3 ஆகியோர்களுடன் கரூர் மாவட்ட எல்லைக்குட்பட்ட வாங்கல் to மோகனூர் பாலம் வாங்கல் செக்போஸ்ட் அருகே தணிக்கை செய்து கொண்டிருந்தபோது மோகனூர் நோக்கி சென்று சென்று கொண்டிருந்த மார்ஜினில் கண்ட 3வது எதிரி தினேஷ்க்கு சொந்தமான TN 28 M 8011 என்ற பதிவு எண் கொண்ட டாரஸ் லாரியில் ரூ3,05,933/- மதிப்புள்ள தலா 50 கிலோ எடை கொண்ட 457 மூட்டைகளில் இருந்த உடைந்த அரிசி மற்றும் தலா 50 கிலோ எடை கொண்ட 21 மூட்டைகளில் இருந்த பொது விநியோகத்திட்ட ரேசன் அரிசியை இவ்வழக்கின் எதிரிகளான A1- சேகர், A2- ராஜேஷ்கண்ணா(எ)குமார், A3-தினேஷ் ஆகியோர்கள் ஆவணங்கள் மற்றும் உரிமம் எதுவும் இல்லாமல் கடத்தி வந்ததை கண்டுபிடித்துள்ளார் என்பதால் 1 முதல் 4 வரை எதிரிகள் 1982ம் வருடத்திய தமிழ்நாடு அட்டவணையிடப்பட்ட பண்டங்கள்(அட்டைகள் மூலம் விநியோகம் முறைப்படுத்துதல்) ஆணையின் பிரிவு 6(4)ஐ மீறிய செயலாற்றியுள்ளதால் இவ்வழக்கின் எதிரிகளான A1, A2, A3, A4 ஆகியோர்களின் செய்கையானது 1955ம் ஆண்டின் அத்தியாவசிய பண்டங்கள் சட்டப்பிரிவு 7(i)(a)(ii)ன் படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாகவும் எனவே எதிரிகளின் செய்கைக்கு கரூர் நகர காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரிகளின் மீது U/s. 6(4) TNSC (RDCS) ORDER, 1982, 7(1)(a)(ii) EC ACTன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளதாகவும் அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றத்தினை நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மற்றும் இருதரப்பு வாதங்களையும் பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

8) இவ்வழக்கின் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட திரு.ராமச்சந்திரன், திருச்சி மாநகரம் கண்ட்ரோண்மெண்ட் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் ஆவார். அவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், "கடந்த 24.09.2021ம் தேதி காலை வாங்கல் செக்போஸ்ட் அருகே சுமார் காலை 05.30 மணிக்கு உதவி ஆய்வாளர் சத்யபிரியா, தலைமைக்காவலர் காந்தி செல்வன், காவலர் வசந்த் ஆகியோருடன் நானும் வாகனத் தணிக்கையில் இருந்தபோது, வடக்கு நோக்கி TN 28 M 8011 டாரஸ் லாரியை நிறுத்தியபோது அந்த லாரியை ஓட்டி வந்த சேகர் என்பவர் தப்பி ஓட முயற்சி செய்தார். அவரை துரத்தி பிடித்து விசாரித்தபோது, அதிலிருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் சாக்குப் பையில் 457 மூட்டைகள் தலா 50 கிலோ வீதம் உடைந்த அரிசி மொத்தம் 22850 கிலோ

அரிசியும், தலா 50 கிலோ எடையுள்ள 21 மூட்டைகளும் மொத்தம் 1050 கிலோ அரிசியும் இருந்தது. அந்த அரிசி மூட்டைகளை ஒவ்வொன்றாக தணிக்கை செய்தபோது, அந்த அரிசி தமிழக அரசால் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும் ரேசன் அரிசி என்று தெரியவந்தது. எதிரியை காலை 06.00 மணிக்கு கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து 09.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்படி லாரி ஓட்டுநர் சேகர் என்பவரை விசாரித்தபோது மேற்படி லாரியை 23.09.2021ம் தேதி நாமக்கல் பெருந்துரையில் சிமெண்ட் மூட்டைகள் ஏற்றிக்கொண்டு மதுரை தெப்பக்குளம் அருகே இறக்கிவிட்டதாகவும், அன்று மதியம் வழக்கின் 3ம் எதிரியான லாரியின் உரிமையாளர் தினேஷ் என்பவரிடம் தொலைபேசியில் வேறு ஏதேனும் லோடு ஏற்றி செல்ல வேண்டுமா என்று கேட்டதற்கு 2ம் எதிரியான ஓம் சன் டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வரும் ராஜேஷ் கண்ணா (எ) குமார் என்பவரிடம் அரிசி மூட்டை லோடு இருப்பதாகவும் அதை ஏற்றிக்கொண்டு நாமக்கல் முத்து பவுல்ட்ரி ஏஜென்சி நிறுவனத்தில் மூட்டைகளை இறக்கி வருமாறும் கூறியதாகவும் கூறினார். அவ்வாறு ஏற்றி வரும்போது அரவக்குறிச்சி செக்போஸ்டில் போலிசார் வாகனத்தணிக்கை செய்வார்கள் என பயந்துகொண்டு பள்ளபட்டி வழியாக மோகனூர் நோக்கி வந்ததாகவும் கூறினார். பின்னர் அவர் தன்னிச்சையாக தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டதால் சம்பவ இடத்தில் பொதுவான சாட்சிகள் இல்லாத நிலையில் என் முன்னிலையிலும், தலைமைக்காவலர் காந்தி செல்வன் அவர்கள் முன்னிலையிலும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் அரிசி மூட்டைகளை கைப்பற்றினோம். என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பின்னர் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் சத்ய பிரியா அவர்கள் முதல் அறிக்கை பதிவு செய்ய உதவியாக இருந்தேன். புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார் " என்று கூறியுள்ளார்.

9) அ.சா.1ன் சாட்சியத்தினை அனுசரித்து அ.சா.2 தலைமைக்காவலர் காந்திசெல்வன், அ.சா.3 தலைமைக்காவலர் வசந்த் ஆகியோர் தங்களது முதல்விசாரணை சாட்சியங்களில் சாட்சியம் அளித்துள்ளனர். மேற்படி மூவரின் சாட்சியங்களை ஒருசேர ஆராயும்போது, சம்பவதினமான கடந்த 24.09.2021 அன்று காலை 05.30 மணியளவில் கரூர் வாங்கல்-மோகனூரிலிருந்து வாங்கல் செக்போஸ்ட் அருகில் வாகனத்தணிக்கையில் அ.சா.1ம் அவருடன் அ.சா.2 தலைமைக்காவலர் காந்திசெல்வன், அ.சா.3

தலைமைக்காவலர் வசந்த் ஆகியோர் இருந்தபோது TN 28 M 8011 என்ற அசோக் லேலண்ட் டாரஸ் லாரியை சோதனை செய்தபோது அதில் சுமார் 50 கிலோ எடையுள்ள 457 மூட்டைகளில் உடைந்த அரிசி மொத்தம் 22,850 கிலோ குருணை அரிசியும், தலா 50 கிலோ எடையுள்ள 21 மூட்டைகளில் மொத்தம் 1050 கிலோ ரேசன் அரிசியும் இருந்தது எனவும் தெரியவருகிறது. மேற்படி லாரியை 1 ம் எதிரி சேகர் என்பவர் ஓட்டி வந்ததும் தெரியவருகிறது. மேலும் மேற்படி லாரியானது 3 ம் எதிரி தினேஷ் என்பவருக்கு சொந்தமானது என்பதும் தெரியவருகிறது. மேலும் 1 ம் எதிரி சேகர் அ.சா.1 மற்றும் அ.சா.2 முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததும் தெரியவருகிறது. அதன் அடிப்படையில் லாரியிலிருந்த அரிசி கைப்பற்றப்பட்டு எதிரிகளின் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் வழக்கு கோப்பிலுள்ள மேற்படி 1050 கிலோ அரிசிக்குண்டான தரச்சான்றிதழில் மேற்படி அரிசியானது ரேசன் அரிசியென உறுதி செய்து சான்று வழங்கியுள்ளதும் தெரியவருகிறது.

10) இவ்வழக்கில் 1, 3 எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதால் அவர்கள் இருவரையும் மூல வழக்கில் தரப்பினராக வைத்துவிட்டு 2, 4 எதிரிகளுக்கு எதிராக வழக்கானது தனியாக பிரித்தெடுக்கப்பட்டு மேற்படி எண்ணில் இவ்வழக்கானது நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி 1 ம் எதிரியான லாரியின் ஓட்டுநர் சேகர் தான் மேற்படி லாரியின் உரிமையாளரான 3 ம் எதிரி தினேஷ் கூறியதன்பேரில் 2 ம் எதிரி ராஜேஷ்கண்ணா நடத்திவரும் ஓம் சன் டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு சென்று அங்கிருந்து லாரியில் அரிசி மூட்டைகளை ஏற்றிக்கொண்டு நாமக்கல்லில் உள்ள 4 ம் எதிரி தியாகராஜனுக்கு சொந்தமான முத்து பவுல்ட்ரி ஏஜென்சிக்கு கொண்டு சென்றதாகவும் அப்போது வாகனத்தணிக்கையில் போலிசார் பிடித்துக்கொண்டதாகவும் தனக்கு லாரியில் ஏற்றப்பட்ட அரிசி ரேசன் அரிசியென்று தனக்கு தெரியாது எனவும் தெரிவித்துள்ளார். அதேபோல லாரியின் உரிமையாளரான 3 ம் எதிரி தினேஷ் இவ்வழக்கின் 2 ம் எதிரியான ராஜேஷ்கண்ணா ஒரு டன்னுக்கு ரூபாய் 500 என வாடகை பேசி லாரியில் அரிசி அனுப்பியதாகவும் அதில் இருந்தது ரேசன் அரிசியென்று தனக்கு தெரியாது எனவும் தெரிவித்துள்ளார். மேற்படி இருவரின் கூற்றினை பரிசீலித்து மேற்படி இருவரையும் 1958 ம் ஆண்டு குற்றவாளிகள் நன்னடத்தை பராமரிப்பு சட்டம் பிரிவு 4(1)ன் படி ஒருவருட காலத்திற்கு நன்னடத்தையில் இருந்துவர உத்தரவிட்டு அவர்களை இந்நீதிமன்றமானது விடுதலை செய்துள்ளது. 2, 4 எதிரிகள் தங்கள் மீதான குற்றச்சாட்டினை மறுத்ததால் அவர்களுக்கு எதிராக இவ்வழக்கு பிரித்து எடுக்கப்பட்டுள்ளது.

11) 2, 4 எதிரிகள் இவ்வழக்கில் தங்கள் மீதான குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு நடத்தியுள்ள போதிலும் வழக்கு கோப்பிலுள்ள ஆவணங்களை ஆராய்கையில் மேற்படி எதிரிகள் நால்வர் மீதும் கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நிர்வாக அலுவலர் அவர்கள் முன்னிலையில் விசாரணை நடைபெற்று கடந்த 02.11.2021 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி உத்தரவில் 2 ம் எதிரி ராஜேஷ்கண்ணா அளித்த வாக்குமூலத்தில் தான் ஓம் சன் டிரேடர்ஸ் நிறுவனம் நடத்தி வருவதாகவும் தனது நிறுவனத்திலிருந்து 23.09.2021 அன்று நாமக்கலில் உள்ள முத்து பவுல்ட்ரி ஏஜென்சிக்காக விற்பனைக்கு செய்வதற்காக 478 மூட்டைகளில் குருணை அரிசியை தினேஷ் என்பவருக்கு சொந்தமான TN 28 M 8011 என்ற லாரியில் பில்லுடன் அனுப்பி வைத்ததாகவும் மேற்படி லாரியை கரூர் குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வு துறையினரால் சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டதில் 21 மூட்டைகளில் ரேசன் அரிசியும் 457 மூட்டைகளில் உடைத்த அரிசியும் இருந்ததாக கூறி தன் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் தான் அனுப்பியது குருணை மூட்டைகள் மட்டுமே எனவும் மேற்படி உடைத்த அரிசியான 22,850 கிலோவிற்கு உண்டான அரசு நிர்ணயம் செய்யும் தொகையை செலுத்தி உடைத்த அரிசியை பெற்றுக்கொள்வதாக வாக்குமூலம் அளித்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

12) அதேபோல 4 ம் எதிரியான தியாகராஜன் கொடுத்த வாக்குமூலத்தில் தான் முத்து பவுல்ட்ரி ஏஜென்சி என்ற பெயரில் நிறுவனம் நடத்தி வருவதாகவும் தனது நிறுவனத்தில் பயன்படுத்துவதற்காக 2 ம் எதிரிக்கு சொந்தமான ஓம் சன் டிரேடர்ஸ் என்ற நிறுவனத்திலிருந்து கோழித்தீவணம் தயாரிப்பதற்கு மூலப்பொருளாக குருணை அரிசியயை கொள்முதல் செய்வதற்காக ஆர்டர் செய்திருந்ததாகவும் அதன்படி அரிசி ஏற்றி வந்த லாரியை வாகனத்தணிக்கையின் போது பிடித்து சோதனை செய்தபோது அதில் 21 மூட்டைகளில் ரேசன் அரிசியும், 457 மூட்டைகளில் உடைத்த அரிசியும் இருந்ததாக தகவல் தெரிந்து கொண்டதாகவும் தான் ரேசன் அரிசியை பெறுவதற்காக ஆர்டர் செய்யவில்லை என்றும் எனவே தன்னை மன்னித்து விடுதலை செய்யுமாறும் கூறியுள்ளது தெரியவருகிறது.

13) மேற்படி வழக்கினைப் பரிசீலித்த கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நிர்வாக அலுவலர் 1, 3, 4 எதிரிகளை எச்சரித்து விடுவித்தும் 2 ம்

எதிரி ராஜேஷ்கண்ணாவிற்கு 22, 850 கிலோ உடைத்த அரிசிக்குண்டான அரசு நிர்ணயித்த தொகையான கிலோ ஒன்றிற்கு ரூபாய் 5.65 என்ற விகிதத்தில் ரூ.1,29,103/- செலுத்த உத்தரவிட்டு அதன்படி மேற்படி தொகையை கடந்த 02.11.2021 அன்று செலுத்தியுள்ளதும் தெரியவருகிறது. மேலும் லாரியின் உரிமையாளரான 3ம் எதிரி தினேஷ் என்பவருக்கு ரூ.25,000/- அபராதம் விதிக்கப்பட்டதும் தெரியவருகிறது.

14) இவ்வழக்கில் 4ம் எதிரி தான் நடத்திவரும் நிறுவனத்தில் கோழித்தீவணம் தயாரிப்பதற்கு மூலப்பொருளாக குருணை அரிசி கொள்முதல் செய்வதற்காக 2ம் எதிரி நிறுவனத்தினிடம் ஆர்டர் செய்திருந்ததாகவும் அதன்படி 2ம் எதிரி 3ம் எதிரிக்கு சொந்தமான லாரியில் மேற்படி அரிசியை ஏற்றி பில்லுடன் அனுப்பி வைத்ததாகவும் தெரியவருகிறது. 2ம் எதிரி ராஜேஷ்கண்ணா தான் குருணை அரிசியை மட்டுமே லாரியில் ஏற்றியதாகவும் ரேசன் அரிசியை தான் ஏற்றவில்லை எனவும் மேற்படி விசாரணையில் கூறியுள்ளார். அதேபோல 4ம் எதிரி தியாகராஜன் தான் குருணை அரிசியை மட்டுமே ஆர்டர் செய்திருந்ததாகவும் அதில் ரேசன் அரிசி ஏற்றி வந்த விவரம் தனக்கு தெரியாது எனவும் மேற்படி விசாரணையில் கூறியுள்ளார். மேற்படி கூற்றுகளை கவனமாக ஆராய்கையில் 2ம் எதிரி நிறுவனத்திலிருந்து அரிசியை லாரியினில் ஏற்றி 1ம் எதிரி ஓட்டிவந்தபோது குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வு துறையினரால் பிடிக்கப்பட்டது தெரியவருகிறது. 2ம் எதிரி மேற்படி லாரியில் ரேசன் அரிசி மூட்டைகளை ஏற்றினாரா அல்லது இடையில் யாராவது ஏற்றியிருப்பார்களா என்பது சந்தேகத்திற்கிடமாக உள்ளது. மேலும் 4ம் எதிரிக்கு மேற்படி அரிசி சென்று சேராதவரை மேற்படி லாரியில் உள்ளது ரேசன் அரிசி தானா என்பது பற்றி அவருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்பதும் தெரியவருகிறது. 4ம் எதிரி 2ம் எதிரிக்கு கொடுத்த ஆர்டர் பற்றிய விவரம் மற்றும் 2ம் எதிரி 1ம் எதிரியிடம் கொடுத்தனுப்பிய பில்கள் ஆகியவற்றை கைப்பற்றி இவ்வழக்கில் சான்றாவணமாக தாக்கல் செய்யப்படவில்லை. 4ம் எதிரியை பொறுத்தவரையில் அவர் ஆர்டர் செய்திருந்தது குருணை அரிசி மட்டுமே என்று கூறியுள்ளநிலையில் லாரியில் ஏற்றி சென்ற ரேசன் அரிசியை அவர் பெற்றுக்கொண்டிருந்தால்தான் ரேசன் அரிசியை கடத்திய குற்றச்சாட்டில் அவரும் உடன்பட்டதாக கூறமுடியும், ஆனால் மேற்படி அரிசியானது 4ம் எதிரியின் கைக்கு சேர்வதற்கு முன்பாகவே வாகனத்தணிக்கையின் போது பிடிபட்டுள்ள நிலையில் லாரியில் ஏற்றப்பட்ட சரக்கானது தான் ஆர்டர் செய்த குருணை அரிசி மட்டும்தானா மற்றும் அதனுடன் சேர்த்து ரேசன் அரிசியும் சட்டவிரோதமாக ஏற்றி வரப்படுகிறதா என்பது பற்றி அவர் அறிந்திருக்க வாய்ப்பில்லாத நிலையில் லாரியில் ரேசன் அரிசி கடத்தி வந்த

குற்றச்சாட்டில் 4 ம் எதிரியை பொறுப்பாக்க இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

15) 2 ம் எதிரியின் மீதான குற்றச்சாட்டினைப் பொறுத்தவரையில் ஏற்கனவே அவர் மீது 2 ம் வகுப்பு குற்றவியல் நடுவரான கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நிர்வாக அலுவலர் விசாரித்து இதுபோன்ற குற்ற செயல்களை செய்யக்கூடாது என்று கடுமையாக எச்சரித்து குருணை அரிசிக்குண்டான அரசு நிர்ணயித்த தொகையை செலுத்த உத்தரவிட்டு அதன்படி அவர் செலுத்தியுள்ளதும் தெரியவருகிறது. மேலே விவாதித்தபடி 4 ம் எதிரி கொடுத்த ஆர்டரின் அடிப்படையில் லாரியில் ஏற்றப்பட்ட அரிசி மூட்டைக்குண்டான பில்லினை இவ்வழக்கில் தாக்கல் செய்திருந்தால்தான் எவ்வளவு மூட்டை அரிசிகள் ஏற்றப்பட்டது என்பது தெரியவந்திருக்கும். குருணை அரிசி மூட்டைகளுடன் சேர்த்து ரேசன் அரிசி மூட்டைகளை கொண்டு செல்லும் வழியில் யாராவது ஏற்றினார்களா அல்லது 2 ம் எதிரி குருணை மூட்டைகளுடன் சேர்த்து ரேசன் அரிசி மூட்டைகளையும் சேர்த்து அனுப்பினாரா என்பதற்குண்டான தெளிவான ஆதாரம் அரசுதரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. எவ்வாறு இருந்தபோதிலும் இவ்வழக்கு சம்பந்தமாக ஏற்கனவே 2 ம் வகுப்பு குற்றவியல் நடுவர் விசாரித்து 2 ம் எதிரியை எச்சரித்து விடுவித்து குருணை அரிசிக்குண்டான தொகையை செலுத்த உத்தரவிட்டுள்ளார். அதன்படி 2 ம் எதிரியும் தொகையை செலுத்தி மேற்படி அரிசியை பெற்றுக்கொண்டுள்ளார். எனவே ஒரே குற்றச்செயலுக்கு இரண்டுமுறை விசாரணை நடத்தி தண்டிக்கவேண்டிய அவசியமில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

16) மேற்படி கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவரின் செயல்முறைகளை பற்றி அரசுதரப்பிலோ அல்லது எதிரிகள் தரப்பிலோ எடுத்துரைக்காத போதிலும் வழக்கு கோப்பில் மேற்படி உத்தரவு நகலின் அசல் தாக்கல் செய்யப்பட்டிருந்ததால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மேற்படி உத்தரவின் நகல்கள் இத்தீர்ப்பின் பரிசீலனைக்கு ஒரு அங்கமாக இருப்பதால் 02.11.2021 மற்றும் 19.01.2022 தேதிய கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவரின் செயல்முறை ஆணைகள் நீதிமன்ற சான்றாவணங்கள் 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

17) முடிவில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும்

வழக்கின் கோப்பினை பரிசீலித்ததிலிருந்தும் 2, 4 எதிரிகளின் மீதான U/s. 6(4) TNSC (RDCS) ORDER, 1982 மற்றும் பிரிவு 7(1)(a)(ii) EC ACT ன் படியான குற்றச்சாட்டானது ஏற்கனவே இரண்டாம் வகுப்பு நிர்வாக நடுவர் விசாரித்து தீர்வு கண்டுள்ள நிலையில், ஒரு குற்றத்திற்கு இருமுறை தண்டிக்ககூடாது என்கிற கோட்பாட்டின் அடிப்படையில், மீண்டும் ஒருமுறை எதிரிகளை தண்டனைக்கு உட்படுத்த வேண்டிய அவசியமில்லை என முடிவு செய்து கு.வி.மு.ச. 248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

18) இவ்வழக்கில் உத்தரவிடுவதற்கான வழக்குச் சொத்து ஏதுமில்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 12.03.2026 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப்பகரப்பட்டது.

BARATH KUMAR

Digitally signed by BARATH KUMAR
Date: 2026.03.12 19:41:36 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**<u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்:-</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.ராமச்சந்திரன், சிறப்பு உதவி ஆய்வாளர் |
| அ.சா.2 | திரு.காந்திசெல்வன், தலைமைக் காவலர் |
| அ.சா.3 | திரு. வசந்த், தலைமைக்காவலர் |
| அ.சா.4 | திரு.விவேகானந்தன், காவல் ஆய்வாளர் |

**<u>அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :-</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | கைப்பற்றுதல்மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | கைப்பற்றுதல்மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் |

**<u>எதிரிகள் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்:-</u>** - இல்லை

**<u>எதிரிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்</u>** :- இல்லை

**<u>அரசு  தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்று பொருள்:-</u>**
இல்லை.

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள் :-</u>**

| | |
|---|---|
| **நீ.சா.ஆ.1** | 02.11.2021 தேதிய கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவரின் செயல்முறைகள் |
| **நீ.சா.ஆ.2** | 19.01.2022 தேதிய கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவரின் செயல்முறைகள் |

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.03.12 19:41:49 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

| | |
|---|---|
| <u>**CC** – 854/2023 நாள் : 12.03.2026</u><br><br>**2, 4 எதிரிகள் ஆஜர். தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.**<br><br>முடிவில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் வழக்கின் கோப்பினை பரிசீலித்ததிலிருந்தும் 2, 4 எதிரிகளின் மீதான U/s. 6(4) TNSC (RDCS) ORDER, 1982 மற்றும் பிரிவு 7(1)(a)(ii) EC ACT ன் படியான குற்றச்சாட்டானது ஏற்கனவே இரண்டாம் வகுப்பு நிர்வாக நடுவர் விசாரித்து தீர்வு கண்டுள்ள நிலையில், ஒரு குற்றத்திற்கு இருமுறை தண்டிக்ககூடாது என்கிற கோட்பாட்டின் அடிப்படையில், மீண்டும் ஒருமுறை எதிரிகளை தண்டனைக்கு உட்படுத்த வேண்டிய அவசியமில்லை என முடிவு செய்து கு.வி.மு.ச. 248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கில் உத்தரவிடுவதற்கான வழக்குச் சொத்து ஏதுமில்லை. .<br><br>BARATH KUMAR<br>Digitally signed by BARATH KUMAR<br>Date: 2026.03.12 19:42:09 +0530<br><br>**நீதித்துறை நடுவர் எண்.1,**<br>**கரூர்.** | |